**22. அதிகன் கதை**

அதிகன் என்பவன் முன்னாளில்கொங்கு நாட்டில் அரசு புரிந்திருந்த ஒரு சிற்றரசன். சிற்றரசனான இவ னிடம் பெருஞ் செல்வங்குவிந்திருந்தது. செல்வக்களிப்பால் செய்வதறியாது திகைத்திருந்தான். இவன் சோழ மன்னனுடைய ஆட்சிக்குக் கீழ் அடங்கியிருந்தானாகையால் அவனுக்குத் திறை செலுத்துவது வழக்கம். செல்வக்ளிப்பில் செருக்கியிருந்த இவனிடம் மடிமை பொருந்தியது. அதனால் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யா மல்திகைத்திருந்தான். திறை செலுத்துமாறு இவனுக்குச் சோழன் தூதனுப்பினான். அதனையும் இவன் பொருட்படுத்தாது மடங்கியிருந்தான். இதனால் சோழ மன்னன் இவனிடம் பகை கொண்டான். பகை நாளும் வளர்ந்தது. சோழன் தன்னுடைய படைகளை இவன்மீது ஏலி னான். படை தன்னுடைய நகரை நெருங்கி வளைந்ததும் இவன் நடுங்கி யெழுந்தான். போர் செய்ய முனைந்தான். பெரும் படையின் முன்புயாதுஞ் செய்ய முடியவில்லை. தோல்வியடைந்து சோழ மன்னனுக்கு அடிமையானான். மடிமையானது நல்லகுடியிற் பிறந்தவனிடத்தில் உண்டா னால் அஃது அவனைப் பகைவர்க்கு அடிமையாக்கிவிடும் என்பதை இவன்அனைவரும் உணருமாறு உணர்த்தினான்.



(மடிமை அடிமைப்படுத்தும்]